7th August 1965]

அரக்கோணம் பஞ்சாயத்து யூனியன் ஜீப்

*120 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் பஞ்சாயத்து யூனியனின் தலைவர் ஜீப் காரை தவருக உபயோகித்ததாக கடந்த மே, ஜூன் மாதங்களில் புகார்கள் ஏதேனும் வட ஆற்காடு மாவட்ட கலெக்டரிடம் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) வட ஆற்காடு மாவட்ட கலெக்டர், இதனை பரிசீலனை செய்து அரக்கோணம் பஞ்சாயத்து யூனியன் தலைவரையும், ஆணையரையும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் நடக்கக்கூடாதென்றும், நிகழ்ந்தால் ஆணையரே முழுதும் பொறுப்பாளி ஆவார் என உத்தரவிட்டுள்ளார்.

திரு. சா. கணேசன்: அப்படி எந்த விதமான தவறு அந்த ஜீப் பிரயோகத்தில் நடந்தது என்பதை அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அந்த ஜில்லாவை விட்டு அடுத்த ஜில்லாவின் ஓரத்தில், செங்கற்பட்டு மாவட்டத்தின் ஓரத்தில் அந்த ஜீப் வந்தது. 3-வது விதியின்படி கலெக்டர் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் அந்த ஜில்லாவை விட்டு அடுத்த ஜில்லாவின் எல்லைக்கு வரவேண்டும். அதற்கு ஒரு ஷார்ட் ரூட் இருக்கிறது. ஆனல் அந்த வழியாக மழை காலத்தில் ஜீப் வர முடியாது. மழை காலத்தில் அது ஜீபபிள் ரோடு அல்ல. ஆகையினுல்தான் ஜீப் சுற்றி வந்திருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: அரக்கோணத்தில் மட்டும் இந்த நிலைமை இல்லை. எல்லா இடங்களிலும் இம்மாதிரி பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும், கமிஷனர்களுக்கும் ஜீப் உபயோகத்தில் தகராறு வந்துவிடுகிறது. ஆகவே, இரண்டு பேர்களுக்கும் இரண்டு ஜீப்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி தலைவர்கள் ஜீப்பை தவருக உபயோகப்படுத்தினுல், அதை அவ்வப்பொழுது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நலமாக இருக்குமே.

திரு. ஜே. மாதா கவுடர்: சார், இந்த பஞ்சாயத்து யூனியன் களுக்குக் கொடுத்த ஜீப்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, பதிலாக மாட்டு வண்டிகளைக் கொடுக்கலாம் என்ற யோசனை இருந்ததே ? அது எந்த அளவில் இருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அங்கத்தினர்கள் யோசனை கூற வேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.